செமிதித் தாளாகப் பதிவுபெற்றது: வெள்ளிக்கிழமை தோறும் வெளிவருவது

உ
சிவமயம்

# இந்துசாதனம்

சைவ பரிபாலன சபை வெளியீடு. பிரதிவிலை: சதம் 20

ஆரம்பம்: விரோதி ஸு (1889) ஆவணிமீ 28-ம் உ அச்சகம்: சைவப்பிரகாச அச்சியந்திரசாலை, 450. காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

புத்-அஎ] யாழ்ப்பாணம்:- இராக்ஷத ஸு ஆனி மீ சுஉ வெள்ளிக்கிழமை (20-6-1975) [இல: சுக

அகில இலங்கை

# சைவசித்தாந்த எழில்ஞானப்பெருவிழா

## வச்சிரவேலு முதலியார் கலந்துகொள்ளுகின்றார்

### மூன்று தினங்கள் வரை கொழும்புமாநகரில் நடைபெறும்

அகில இலங்கைச் சைவ சித்தாந்த எழில் ஞானப் பெருவிழா 21, 22, 23-ம் திகதிகளில் கொழும்பு — பம்பலப்பிட்டி சரசுவதி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. திருவாவடுதுறை ஆதின மகா வித்துவான் க. வச்சிரவேல் முதலியார் அவர்கள் இப்பெருவிழாவிற் சிறப்புச் சொற்பொழிவாளராகக் கலந்து கொள்வார்கள்:

இலங்கை அரசியல் அமைப்பு நீதிமன்ற நீதியரசர் திரு வி சிவசுப்பிரமணியம் அவர்கள் இப் பெருவிழாவை 21ம் திகதி காலை தொடங்கி வைப்பார்கள்.

இலங்கை மெய் கண்டார் ஆதினமும் ஈழத்துத் திருநெறித் தமிழ் மன்றமும் இணைந்து நடாத்தும் இவ்விழாவின் நிகழ்ச்சிகளுக்கு ஸ்ரீமத் ஞானப்பிரகாசத் தம்பிரான், திருவாவடுதுறை ஆதீனமகா வித்துவான் உயர்திரு. க. வச்சிரவேல் முதலியார் அவர்கள். சைவ பரிபாலன சபைத் தலைவர் த. சோமசுந்தரம் அவர்கள், தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள். கொழும்பு தமிழ்ச் சங்கத் தலைவர் மு. வயிரவப்பிள்ளை அவர்கள், ஈழத் திருநெறித் தமிழ் மறைத் தலைவர் இரா, சபாநாயகம் ஆகியோர் அவ்வப்பொழுது தலைமை தாங்குவார்கள்.

சித்தாந்த கலாநிதி க. கணபதிப்பிள்ளை: நா. செல்லப்பா அவர் ள், க, கிருஷ்ணபிள்ளை அவர்கள், ச. விநாயகமூர்த்தி அவர்கள் உட்பட பலர் உரை நிகழ்த்துவார்கள்;

---

### மல்லாகம் இந்துசமய விருத்திச் சங்கம்

——0——

மேற்படி சங்கத்தின் பதினன்காவது ஆண்டு நிறைவும், பரிசளிப்பு விழாவும் 22-6 75 ஞாயிற்றுக்கிழமை பி. ப, 6 மணிக்கு மல்லாகம் இந்துக் கல்லூரி மண்டபத்தில், சங்கத் தலைவர் திரு. அ சரவணமுத்து J P. அவர்களின் தலைமையில் நடைபெறும். பிரதம பேச்சாளராகச் சைவப் பெரியார் திரு. ந. அமிர்தசாகரன் (வலி - வடக்குக் காரியாதிகாரி) அவர்கள் கலந்துகொள்வார்.

---

### சமய தீட்சை

——0——

கொழும்பு விவேகானந்த சபை ஆதரவில் நாளை (21-6-75) சனிக்கிழமை காலை 10-45 மணிதொடக்கம், சபைப் பிரார்த்தனை மண்டபத்தில், காப்பாளர் திரு இரா சபாநாயகம் அவர்கள் தலைமையில், வேதாரிணியம் சிவஸ்ரீ மு. நடராஜக் குருக்கள் தீட்சை மந்திரோபதேசம் வைப்பார்கள்.

---

### குரக்கன் மாவும் பனம் பாணியும்

குரக்கன் மாவுடன் பனம்பாணியைக் கலந்து பிசைந்து மெல்லியதாக உரொட்டி போலத் தட்டி வேக வைத்து உண்பது உடம்புக்கு உறுதியளிப்பதாகும்.

உரொட்டியை மிகவும் மெல்லியதாகத் தட்டி இடியப்பத் தட்டில் ஆவியில் வேகவைத்துண்ணும்போது மிகவும் மெதுமையாகவும் இருக்கும். குரக்கனோடு பனம்பாணி சேர்வதால் இவ்வுணவு இதமாயிருக்கும்.

— மில்க்வைற் நிலையம்

---

'நாவலரும் கோவிலும்' என்ற கட்டுரையில் எழுந்த நேயர் நெஞ்சக் கருத்துக்கு அக் கட்டுரை எழுதியுதவியவர் இவ்விதழிலே விளக்கம் கொடுத்திருக்கின்றனர் இவ்வளவிலே கட்டுரை பற்றிய நேயர் நெஞ்சக்கருத்து நிற்கக் கட்டுரை வளரும்.

ப — ர்

---

## நாவலரும் கோயிலும்

தொகுத்து அளித்தவர் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள்.

[ எழுதி உதவியவர் சி. சீவரத்தினம். ]

### (2) கோயில் (நல்லூர்) (முன் வளர்ச்சி — 13)

ஆறுமுகநாவலர் பிரபந்தத் திரட்டு இரண்டு பாகங்கள் கொண்டது, முதற் பாகத்தில் 22 விஷயங்கள் உண்டு. அவற்றில் ஒன்று யாழ்ப்பாணச் சமயநிலை.

இரண்டாம் பாகம் நல்லூர்க் கந்தசுவாமி கோயில் பற்றியது' அதில் மூன்று கட்டுரைகள் உண்டு;

(1) நல்லூர்க் கந்தசுவாமி கோயில்
(2) நல்லூர்க் கந்தசுவாமி கோயில்
(3) மித்தியாவாத நிரசனம்

யுவ ஸு ஆடி மீ 1875; யுவ ஆவணி மீ 1875; யுவ தை மீ 21உ முறையே வெளிவந்தன.

முதலாவது யாழ்ப்பாணத்துச் சைவ சமயிகளே! என்று விளித்தெழுதியது. 50 பிரிவுகள் கொண்டது.

இரண்டாவது நல்லூர்க் கந்தசுவாமி கோயிலார்களை விளித்தும், யாழ்ப்பாணத்துச் சைவசமயிகளை விளித்தும் எழுதப்பெற்றது. கோயிலாரை விளித்த பகுதியாக 37 பிரிவும், மற்றையதில் 13 பிரிவும் உண்டு. அன்றி பரிசேடம் என்ற ஒரு அநுபந்தமும் உண்டு; இது அக பரிவாரத்தால் ஒருவர் எழுதியது: உள் இரகசியங்களை வெளிப்படுத்துவது 24 பிரிவு கொண்டது: இரண்டாவதற்கு முகப்பில் நாவலர் எழுதிய குறிப்பு இது:

நாம் உலகத்தாருக்குப் பயன்படும்பொருட்டு எழுதி அச்சிற் பதிப்பித்து வெளிப்படுத்திய நல்லூர்க் கந்தசுவாமி கோயில் என்னும் பத்திரிகையை வாசித்தவர்களுள்ளே, தக்கவைகள் தகாதவைகள் பகுத்தறியும் அறிவும் மனச்சான்றுக்கு ஒரு சிறிதும் விரோதமறப் பேசும் பேச்சும் உடைய மேன்மக்களொழிய மற்றவர்களுள்ளே பலர் உண்மை அறிந்தும் பொறாமை துரபிமான முதலிய காரணங்களினாலும் வேறுபலர் இன்னும் உண்மை அறியமாட்டாமையினாலும், அப்பத்திரிகையை வாசியாதவர்கள் பலர் இவர்கள் கற்பித்த பொய்வார்த்தைகளினால் விளைந்த மயக்கத்தினாலும், அநியாயமாகவே நம்மைத் தூஷித்துக்கொண்டு திரிகிறார்கள். எல்லாரும் அப்பத்திரிகையோடு இவ்விரண்டாம் பத்திரிகையுஞ் சித்தசமாதானத்தோடு பலமுறை வாசித்து, உண்மை தெளிந்து அடங்கி ஒழுகக் கடவர்கள்.

மூன்றாவது மித்தியாவாத நிரசனத்துக்குப் பதித்தோர் எழுதிய குறிப்பும் பின்வருமாறு:—

தூஷணைகளின்றி நியாயத்தோடும் சாத்திர விதியோடும் எழுதப்பட்ட ''நல்லூர்க் கந்தசுவாமி கோயில்'' என்னும் இரண்டு பத்திரிகைகளுக்கும் மாறாகத் தூஷணைகளே மிகவும் பொதிந்த ''பிரதிகண்டனம்'/ முதலிய நான்கு பத்திரிகைகள் ஷை கோயிலாரால் எழுதுவித்து அச்சிடப்பட்டன. இவைகளை மறுத்து ''வழூஉக்களை வச்சிர குடாரம்'' முதலிய சில பத்திரிகைகள் சிலரால் வெளிப்படுத்தப்பட்டன. இம் மித்தியாவாத நிரசனம் ச. விசுவலிங்கபிள்ளை என்பவர் பல முறை வேண்டிக்கொண்டதினால் நாவலரவர்களால் எழுதப்பட்டது. இதன் பின் கலகங்கள் ஒழிந்துவிட்டன.

நிரசனம் இரு பகுதி. முதற் பகுதி கந்தமடப் பிரபுவே! என்று விளங்குகின்றது: அதில் 24 பிரிவுண்டு. இரண்டாவது பகுதி, தேசாபிமானியே! என்று தொடங்குகின்றது. அதில் 15 பிரிவுண்டு;

(வளர்ச்சி 3-ஆம் பக்கம்)

---

## திருவிழாவும் அதன் உண்மைப் பொருளும்

[சுருவில் ஸ்ரீ ஹரிஹர புத்திர ஐயனர் ஆலய மகா கும்பாபிஷேகம் 19-6-75 அன்று சிறப்பாக நடைபெற்றுள்ளது. இம் மகா கும்பாபிஷேகம் சார்பாய் வண்ண மலர் ஒன்றும் வெளியாகி இருக்கின்றது. அவ் வண்ண மலரில் இடம்பெற்ற கட்டுரை ஒன்று இங்கு மறுபிரசுரம் செய்யப்படுகின்றது. ஆ — ர்.]

[ திருமதி. இராசலட்சுமி சண்முகலிங்கம். சுருவில் ]

ஆலயமில்லாத ஊர் எல்லாவிதச் செல்வங்கள் நிறைந்திருப்பினும் திருவருள் இல்லாது இருக்கும். திருக்கோயில் இல்லாத ஊர் ''அடவி காடே'' என்றார் அப்பர் பெருமான். ஆலய வழிபாட்டின் பெருமையை ஆன்மாக்களுக் குணர்த்தி அவர்களை நல் வழிப்படுத்தும் வண்ணம் எல்லாம் வல்ல இறைவனுக்கு ஆலயம் அமைத்துப் பூசித்தனர் ஆன்றோர்;

திருநந்திதேவர், அகத்தியர், வசிட்டர் போன்ற முனிவர்களும், பிரமா, விட்டுணு முதலிய தேவர்களும் சமய குரவர்களும், சந்தான குரவர்களும் மற்றும் பல்வேறு அரசர்களும் ஆலய வழிபாடு செய்தன்றோ அரும் பேறு பெற்றனர். ஆலயத்தில் இறைவனை வணங்கி இன்பநிலையைடைந்தோர் உயர்திணையோர் மாத்திரமன்றி அஃறிணை வர்க்கங்களாகிய சிலந்தி, நாரை, கருக்குருவி, சர்ப்பம், யானை முதலியனவும் ஆலயவழிபாட்டால் உயர் நிலையடைந்தன என்பது சாத்திர தோத்திரங்களிற் காணப்படும் உண்மையாகும்;

(வளர்ச்சி 2ம் பக்கம்)

சைவ சமயத் [illegible] செய்திப் பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்க தண்புனல்
வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையகமுந் துயர்தீர்கவே.
திருச்சிற்றம்பலம்


# இந்துசாதனம்

இராக்ஷத ஹூ ஆனி மீ சூ-உ வெள்ளி


## கொடி ஏற்ற முடியாத கோயில்

உரிமைக்கும் ஆதிக்கத்துக்கும் ஊரவர்கள் இரண்டு பட்டு வருவதால் அருமையான ஆலயக் கருமங்கள் தடையுற்று நடைபெறு தொழிவதெனின் இப் பழி யாருக்கு. இதன் பயனை யார் அநுபவிக்க இருக்கின்றனர் எனச் சமயிகள் ஆச்சரியமுறுவார்கள், சமய நெறிக் கமையாதவர்கள் பிரிவினை விபரீதத்தைச் சில காலத்துக்குப் பார்த்து மகிழ்ந்து, பின் தாமும் துன்புறுவர், இது அநுபவ உண்மையாகும். இத்தகைய நிலையிலே பழம் பெருமை வாய்ந்த இணுவிற் கந்தசுவாமி கோவில் இன்று இருக்கின்றது. நீதி மன்றத்தில் விவகாரத்தி லீடுபட்ட இவ்வூர் மக்கள் இறுதியாக ஒரு முடிவைப் பெற்றும் நடைமுறையிற் கொண்டு வர முடியாதவர்களாய்க் கருத்தழிந்து நிற்கின்றனர். உரிய காலத்திற் கோயிற் கொடியேற்ற விழாவும் செய்யப்பெறுதிருக்கின்றது, பாதுகாவலரின் பாதுகாவலிலே கோயில் இருக்கின்றதென்ற விபரீதத்தைக் கேள்வியுற்ற சமயிகள் அலமந்து போயினர்.

சைவ சமய நெறிக்கு மிக முக்கியமான நிலையம் ஆலயமாகும், அரனும் அரனடியாரும் ஆலயமும் என்று சமயிகள் இவற்றையே வழிபடுவார்கள், இவற்றுக்குப் பணியாற்றுவார்கள். இவ்வாறில்லாது அகந்தையும் ஆணவமும் பிணிக்க அதிகாரத்தில் ஆசைப்பட்டு இறைவன் கோயிலைக் குடும்பச் சொத்தாக எண்ணி அற நெறியை மறந்து — சைவப் பெரு நெறியை மதியாது நிற்பவர்களே கலிகால விபரீத கோலத்தின் சிற்பிகள் ஆகின்றனர். இந் நிலையை இல்லாதொழிக்கவே அந்நாட்களில் நாவலர்பெருமான் அரும் பாடுபட் டுழைத்தார். ஆவன செய்தார். இன்று நாவலர் நற்றகையார் எம்முடன் இருப்பாரேயானல் எங்கள் சமயப் பயிற்சி பங்க மில்லாதோங்கும். அவ்வளவுக்குப் புண்ணியஞ் செய்யாதவர்களாய்விட்டோம்.

கோடி பொன் வழங்கிக் கோபுரங்கள் எழுப்பினர்கள் முற்கால மன்னவர்கள். சிற்பக் கலை வல்லுநர்கள் சிவ சொரூப இலக்கணத்தைத் தூபிகளிலும் மண்டபங்களிலும் மதில்களிலும் இலக்கியமாயமைத்தார்கள். ஆலயமே சாலச் சிறந்த பொக்கிஷமாகப் பேணிப் பணிந்தார்கள். என்னே இக்கால இறுமாப்பு! நாவலர் பெருமானைச் சற்றே எண்ணுவோர் சமயக் காவலராய் அவரமைத்த நெறியை நினைத்துப் பார்ப்பார்களாக.

"ஈசனடியார் இதயங் கலங்கிடத்
தேசமும் நாடும் சிறப்பும் அழிந்திடும்".


உ
சிவமயம்

### சைவ பரிபாலன சபை

#### உறுப்பினர் சந்தா.

சபை அங்கத்தவர்கட்கு,

சபை உறுப்பினர் சந்தா பாக்கி உள்ளவர்கள் தயவு செய்து ஜூன் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் 1975 ம் ஆண்டிற்குரிய சந்தாவையும் பழைய பாக்கிகளையும் செலுத்திவிடுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

**1975-ம் ஆண்டு முதல் புதியசந்தா விபரம்**

| | |
|---|---|
| சாதாரண அங்கத்தவர் ஆண்டுச் சந்தா (ஜனவரி முதல் டிசம்பர் வரை) | 20/— |
| பிரவேசக் கட்டணம் | 5/— |
| ஆயுள் அங்கத்தவர் சந்தா | 150/— |

பாக்கி இல்லாத அங்கத்தவர்கட்கு இலவசமாக 'இந்துசாதனம்' 'Hindu Organ' பத்திரிகை அனுப்பப்படும்.

சைவபரிபாலன சபை, வை. இரகுநாதமுதலியார்,
யாழ்ப்பாணம், 9-6-75. கௌரவ செயலாளர்.


## திருவிழாவும் அதன் உண்மைப் பொருளும்

( 1-ஆம் பக்கத்து வளர்ச்சி )

ஆலயங்களில் காணப்படும் மூர்த்திக்கு அவ்வக் காலங்களில் விழா எடுப்பர். குறிக்கப்பட்ட நட்சத்திரங்களிலும் திதிகளிலும் விசேடபுண்ணிய காலங்களிலும் விழா நடைபெறும். இவை எல்லாவற்றிலும் சிறப்பாக ஆண்டுக் கொருமுறை ஆலயங்களில் பெருவிழா — திருவிழா எடுப்பர். இவ்விழாக்களை எடுப்பதன் நோக்கம் யாதெனில் உயிர்களுடைய துன்ப நிலையையும், அதனை நீக்க இறைவன் கொண்ட பேரருட் தன்மையையும் யாவரும் உணர்ந்து இன்பநிலையடைதற்கேயாம்.

இறைவன் ஆன்மாக்களின் பிறவிப் பிணியை நீக்கி அவர்களுக்குத் தனது பேரா இன்பப் பெருநிலையைக் கொடுப்பதற்காகவே படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்று சொல்லப் படுகின்ற ஐந்தொழில்களைச் செய்கின்றான்; ஐந்தொழிலையும் இயற்றும் இறைவனின் திருவுருவ வெளிப்பாடே ஸ்ரீமன் நடராச மூர்த்தியாகும்;

தோற்றம் துடியதனில் தோயுந் திதியமைப்பில்
சாற்றியிடு மங்கியிலே சங்காரம் — ஊற்றமாய்
ஊன்று மலர்ப்பதத்தே உற்றதிரோத முத்தி
நான்ற மலர்ப் பதத்தே நாடு.

நாத தத்துவமே படைத்தலுக்கு மூலமாகவுள்ளது. நடராசரின் வலக்கையில் இருக்கும் 'துடி'' படைத்தற் றொழிலைக் குறிக்கின்றது. திருவிழா ஆரம்பிப்பதற்கு முதற்கண் ஆச்சாரியர் மேளவாத்தியத்தை ஒலித்தலாகிய "பேரீதாடனம்" செய்து ஆரம்பிப்பர். இதுவும் படைத்தற்றொழிலைக் குறிப்பதாகும்; அங்குரார்ப்பணம் செய்தலும் படைத்தற்றொழிலைக் குறிப்பதாகும்.

முதலாம் நாள் விழாவனது தூலதேகத்தை நீக்கும் பொருட்டுச் செய்வதாம்; பரமவைத்தியராகிய இறைவன் தூல சூக்குமமாகிய இரு பிரபஞ்சங்களை எமக்குத் தந்து மலமாகிய நோயை நீக்கி சிவஞானத்தை விளக்கி சிவானந்தப் பெரும் பேற்றை ஆன்மாவிற்கு அருளும் தத்துவக் கருத்தை விளக்குவதே கொடியேற்று விழா.

திருக்கோயிலிலே காணப்படும் கொடித்தப்பம் முழுமுதற் கடவுளாகிய பதியைக் குறிக்கும். அதைச் சார்ந்திருக்கும் கொடிச்சீலை பசுவாகிய ஆன்மாவையும், தருப்பைக்கயிறு பாசத்தையும், கொடிக்கயிறு திருவருட்சத்தியையும் குறிக்கும். ஆன்மா பாசபந்தம் நீங்கிச் சிவத்தை அடைவது திருவருட்சத்தி மூலமாகவே என்பதைக் கொடிச்சீலை, கொடிக்கயிறு என்பன காட்டுகின்றன: சுருக்கமாகக் கூறின் கொடியேற்று வைபவம் மும்மலங்களினால் பீடிக்கப்பட்டுப் பிறந்திறந்து உழலும் ஆன்மா தீடசாக்கிரமத்தால் மல நீக்கம் பெற்றுச் சிவத்தை அடைதலை உணர்த்தும் நிகழ்ச்சியென்பது எல்லோராலும் உணரப்படவேண்டியது.

இரண்டாம் நாள் உற்சவமானது தூலசூக்கும தேகத்தின் வேராகிய ஆன்மா அத்தேகத்தைத் தன்னின் வேறெனக் கண்டு பற்று நீக்குதல் வேண்டும் என்னும் பாவனையாகவே நடத்தப்படுகின்றது,

மூன்றாம் நாள் உற்சவம் மூவினை, முப்புத்தி, முக்குணம், மும்மனம், முக்குற்றம், முப்பிறப்பு, முப்பற்று என்னும் ஏழையும் ஒழித்தற் பொருட்டுச் செய்யப்படுவதாகும்,

நான்காம் நாள் உற்சவம் ஆன்மாக்கள் தத்தம் வினைப்பயனுக்கு ஏற்ப வந்து பிறப்பதற்கு உரிய நால்வகைத் தோற்றத்தையும், நாற்கரணங்களையும், ஒடுக்கி முத்தியருளுவதற்காக நடைபெறுவதாகும்.

ஐந்தாம் நாள் விழா ஐம்புலன்களும் ஐம்பொறிகள் வழிச்செல்ல வொட்டாமல் தடுத்து ஏகாக்கிர சித்தத்துடன் தியானிக்குமிடத்து இறைவன் தோன்றியருளுவார் என்ற உண்மை வெளிப்படுமாறு நடைபெறுவதாகும். மேலும் அது ஐந்து அவத்தைகளும் மலங்களும் நீங்குதற்காகவுமாம். மலங்கள் நீங்கினாலன்றி அருளைப் பெறமுடியாது.

ஆறாம் நாள் உற்சவம் காமக்குரோதம் முதலிய ஆறு உட்பகைகளையும் கெடுத்து ஆன்மாவிற்கு அருள் புரியும் வண்ணம் அமைவதாகும், அத்தோடு ஆறு அத்துவாக்கள் வழியாக வரும் பாவங்களையும் போக்கி அருள் செய்வதாகவும் அமையும்.

ஏழாம் நாள் விழா ஏழுவகைப்பிறப்பும், வித்தியாதத்துவம் ஏழும், மாயாமல குணம் ஏழும் நீங்கும் பொருட்டுச் செய்யப்படுவதாம்.

எட்டாம் நாள் உற்சவம் சர்வஞ்ஞத்துவம் முதலிய எண்குணங்களும் விளங்குதற் பொருட்டுச் செய்யப்படுவதாகும்,

இவ்வாறாக மேளவாத்தியம் ஒலிப்பதும் பாலிகை இடுதலும் படைத்தற்றொழிலையும், கொடியேற்றம் முதல் எட்டாம் நாட் காலைவரை நடைபெறும் திருவிழாக்கள் யாவும் காத்தற்றொழிலையும் குறிக்கும்;

எட்டாம் நாள் மாலை நிகழும் வேட்டைத் திருவிழாவும் ஒன்பதாம் நாள் நடைபெறும் தேர்த் திருவிழாவும் அழித்தற் றொழிலாகிய சங்காரத்தைக் குறிக்கும்;

பன்றி போன்ற ஆணவ மலமும், மான் போன்ற கன்ம மலமும், பட்சிபோன்ற மாயா மலமும் ஆன்மாவைச் சார்ந்து நின்று வருத்தும் துட்டர்களாம். அஞ்ஞானத்தை உண்டுபண்ணுகின்ற மும்மலங்களை அடக்கிச் சிவபெருமான் ஆன்மாவுக்குச் சாயுச்சிய நிலையைக் கொடுக்கும் குறிப்பாகவே வேட்டைத் திருவிழா எனப்படும் மிருகம் யாத்திரை விழா நடைபெறுகின்றது;

தேர்த் திருவிழா ஒன்பதாம் நாள் நடைபெறும், திரிபுர சங்காரத்து உண்மைக் காட்சியை உணர்த்தி ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களையும் கெடுத்தற்காக இரதோற்சவம் நடத்தப்படுகின்றது. தேரின் தோற்றத்தை மனதிலே சிறிது சிந்தித்துப் பார்ப்போமானால் அதன் முழு உருவமும் கொழுந்துவிட்டெரியும் நெருப்பின் உருவத்தினை ஒத்திருப்பதைக் காணலாம். "சாற்றியிடும் அங்கியிலே சங்காரம்'' என்ற வரியில் இக் கருத்துத் தெளிவாக உள்ளது. அக்கினி சங்காரத்தைக் குறிக்கும்;

பத்தாம் நாட் காலையில் சூர்ணோற்சவம் மறைத்தற்றொழிலைக் குறிக்கும்; தநு கரண புவன போகங்கள், நான், எனது என்னும் செருக்கை எழுப்புவன. அவைகளைச் சத்தியால் இடித்துச் சுத்த சூரணமாக்கி இறைவனிடத்தில் சமர்ப்பிக்க அவர் திரோபவ கிருத்தியம் செய்தருளுவர்; அப்பொழுது ஆன்மா இருவகைப் பற்று மற்றுத் தன் செயலற்றுச் சிவன் செயலாய் நிற்கும்,

மேலும் பத்தாம் நாளில் நடைபெறும் தீர்த்த விழா, சண்டேசுர விழா, ஆச்சாரியர் உற்சவம் என்பன ஐந்தொழிலில் இறுதியாகிய அருளலைக் குறிப்பன; "முத்தி நான்ற மலர்ப்பதத்தை நாடு'' என்று நடராசப் பெருமான் திருவடிவத்தில் தூக்கிய திருவடியை அருளலுக்குச் சுட்டப்பட்டது. அருளலாவது பக்குவான்மாக்களுக்குப் பரமுத்தி அருளிப் பேரா இன்பநிலையில் அமிழ்த்தலாகும்.

முத்தி பெறுதற்குக் குரு லிங்க சங்கம சேவை மூன்றும் அவசியமாகும்: குரு சேவையே ஆசார்ய உற்சவமாகும். இலிங்கசேவையே மூர்த்திக்குச் செய்யும் தீர்த்தத் திருவிழா: சங்கம சேவையே சிவனடியார் வடிவமான சண்டேசுவர உற்சவமாகும். இறைவனது திருவருள் தீர்த்த ரூபத்தில் அமைவதாகக் கொண்டு இறைவனது அம்சமாகிய அஸ்திர தேவருக்கு அபிடேகம் செய்த தீர்த்தத்தை அடியார்கள் உள்ளே அருந்தியும், புறத்தே புரோட்சித்தும், அத் தீர்த்தத்தில் அமிழ்ந்தி மூழ்கியும் திருவருளைப் பெற்றுக் கொள்ளவேண்டும்.

( வளர்ச்சி 3-ஆம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேயர் நெஞ்சம்

# நாவலரும் கோயிலும்

பற்றிய

## குறிப்புக்கள்பற்றி ஒரு குறிப்பு

13-6-75-ல் நாவலரும் கோயிலும் பற்றி இரு குறிப்புக்கள் வந்திருக்கின்றன. சிந்திப்பவர்களுக்கு அவை நல்ல உபகாரங்கள். நன்றி கூறுவோமாக.

குறிப்புக்களில் வரும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வழிவகையும், அதே தேதிப் பத்திரிகையிலே தானே 'நாவலரும் கோயிலும்' என்ற கட்டுரையில் அமைந்திருப்பது முருகன் திருவருள் போலும்.

இணை மக்களாகிய பொது மக்கள் வழிபாடு வேறு. வேதாகம வழக்குக்குரியோர் வழிபாடு வேறு. இதனைத் திருமுருகாற்றுப் படையில் ஒன்று தொருடரில் வரும் வேடுவரின் வெறியாடலை எடுத்துக்காட்டி நல். கோயில் 2-ம் பத்திரிகை 26-ம் பிரிவில் நாவலர் விளக்கஞ் செய்திருக்கின்றார்.

கடவுள் வழிபாடு இடந்தோறும் மக்கள் பக்குவ நிலைக்கேற்றவாறு அமைந்திருக்கும், அந்த அந்த இடத்துக்கு அது பொருத்தம்.

நாவலர் தந்தவை முருகனிலக்கணமறிந்து வழிபடுதற்கு உபகாரமா? பிரதிகூலமா என்பது சிந்தனைக்குரியது.

'சிவபெருமானுடைய கோபாக்கினிக்குப் பாத்திரமாவோம்' என்று, 'எழுத்தாளர்' ஆகிய நாவலர் கூறுவதால், இறைவன் கருணைக்கு இழுக்கு வருமென் றெண்ண வேண்டியதில்லை. இறைவன் கோபமும் கருணையேயாம். கருணையின் விளைவேயாக சங்காரம்.

நாவலர் கருத்துக்கள் பழைய வரலாறே ஆயினும் ஆகுக; பிறவாறு ஆயினும் ஆகுக; நாவலர் காலத்திலேயே நாவலர் எழுத்துகள் நல்லூருக்கு வழிபடச் செல்வோரைக் கட்டுப்படுத்தவில்லை; இனி அவ்வாறு நிகழ்ப்போவதுமில்லை.

நாவலர் கருத்துக்கள் நாவலர் வழிவந்த சைவபரிபாலன சபை முன் சமர்ப்பணஞ் செய்யப்பட்டிருக்கின்றன. தம் கருத்தை ஆராய்தற்கு நாவலர் வழியும் சொல்லி வைத்திருக்கிறார்.

நம்மவர் போய்வரும் தீபேத்திய கைலாசம் கதிர்காமம், செல்வச்சந்நிதி வேதசிவாகம விதிப்படி நடக்க வேண்டுமென்று நாவலர் சொல்லவரவில்லை. தமிழரசர் காலத்தில் வேதாகம விதிப்படி அமைந்த நல்லூர்க் கோயில் மீண்டும் அவ்வாறமைவதே சாத்திரசம்மதமாம் என்பதே நாவலர் கருத்து.

நாவலர் சொல்லுஞ் சீர்திருத்தம் சர்க்கரைப் பந்தரில் தேன் மாரியாய் நன்மையைப் பெருக்குமா? மண்மாரியாய்த் தீமையைப் பெருக்குமா? என்பதை தெட்டத் தெளிய வைப்பது நாவலர் வழித்தோன்றலான சைவ பரிபாலன சபையின் கடனும்.

சி. சிவரத்தினம்

யாழ்ப்பாணம், 16-6-75.

## கும்பாபிஷேகம்

இருபாலை வேளாதோப்பு ஸ்ரீ மதுரமகா முத்துமாரி அம்பாள் ஆலய கும்பாபிஷேகம் 19-6-75 அன்று சிறப்பாக நடைபெற்றது.

## சேக்கிழார் குருபூசை

சென்ற வெள்ளிக்கிழமை (13-6-75) சைவ பரிபாலன சபை ஆதரவில் முற்பகல் 9 மணி தொடக்கம் பிற்பகல் 1 மணி வரை சேக்கிழார் குருபூசை செவ்வனே நடைபெற்றது. சிவபூசா மண்டபத்தில் சிவபூசையும் நாவலர் மண்டபத்தில் நடராசப் பெருமானுக்கு விசேட பூசையும் திருமுறைப் பாராயணமும் சேக்கிழார் நாயனுர் புராண படனமும் நடைபெற்றன.

சைவப் பெரியார் திரு சி தம்பிஐயா அவர்கள் தலைமையில் இந் நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

## நாவலரும் கோயிலும்

சென்ற சில மாதங்களாக உங்கள் பத்திரிகைகளில் "நாவலரும் கோயிலும்" என்ற தலைப்பில் வரும் கட்டுரைகளில் நாவலர் பெருமான் வன்மையாகக் கண்டித்த சில விடயங்கள் தொடுக்கப்பட்டுள்ளன.

அக்காலம் இக்காலம் என்ற காலவரை பரம் பொருளாகிய பொருளுக்கும் அப் பொருளின் விதிகளுக்கும இல்லை என்பதை எச் சமயமும் மறுக்க முடியாது

சென்ற இதழில் நாவலர்பெருமானின் கூற்றுக்களை ஆட்சேபித்துச் சில கருத்துக்கள் எழுதப்பட்டுள்ளன.

இக் கட்டத்தில் நமக்கு உதவத் தக்கது வேத, உபநிஷத, ஆகமக் கூற்றுக்களே! சமயங்களுக்கு அடிப்படைக் கூற்றுக்களைக் கொண்டவை இவை என்பதை மறுத்தற்கு இடமில்லை.

எப்படியாகிலும் சைவத்திற்கும் தமிழுக்கும் மறுமலர்ச்சி ஈட்டிய பெருந்தகை வள்ளலாரின் கூற்றுக்கு மாற்று எழும் இக் காலத்தில் வாசக நேயர்களுக்கு தேற்றத்தைக்கொடுப்பது தங்கள் பத்திரிகையினதும், நா. செல்லப்பா அவர்களினதும். பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களினதும் தலையாய கடன்! கடமை!!

— வைத்தியகலாநிதி
நா. கனகரத்தினம்

# நாவலரும் - கோயிலும்

( 1 ஆம் பக்கத்து வளர்ச்சி )

யாழ்ப்பாணச் சமய நிலையிலிருந்தும் நல்லூர் பற்றிய மூன்று பத்திரிகைகளிலிருந்தும் தொகுத்த தொகுப்பே இக் கட்டுரை; சிறப்பாகச் சைவ சமயிகளும் பொதுவாக தமிழ் மக்களும் அடைந்திருக்கும் மன அதிர்ச்சி வெள்ளிடை மலை.

பல்குழுவும் பாழ்செய்யும் உட்பகையும்
வேந்தலைக்கும்
கொல்குறும்பும் இல்லது நாடு.

என்கின்றார் வள்ளுவர். நம் நாடோ இவையெல்லாம் உள்ளது. நம் நாட்டுக்குச் சாந்தி கடவுளாலேதான் ஆகவேண்டும்,

நாவலர் பெருமான் திருமூலர் அருளிய,

ஆற்றரு நோய்மிகு மவனி மழைகுன்றும்
போற்றரு மன்னரும் போர்வலி குன்றுவர்
கூற்றுதைத் தான்றிருக் கோயில்க ளானவை
சாற்றிய பூசைக ளப்பிடிற் றானே.

முன்னவ னார்கோயிற் பூசைகண் முட்டிடின்
மன்னரீக்குத் தீங்குள வாரி வளங்குன்றுங்
கன்னங் களவு மிகுத்திடுங் காசினிக்
கென்னரு ணந்தி யெடுத்துரைத் தானே.

என்னும் இரு மந்திரங்களையும் சிரமேற் கொள்பவர்.

சாந்தியும் சமாதானமும் எய்தி இனிது வாழ்வதற்கு நல்வழியை நாவலர் பெருமான அருளியிருக்கின்றார். நாட்டின் சிறப்பு நல்ல கோயிலின் சிறப்பே.

சிந்திப்பார் சிந்திக்குக,

நல்லூர்த் தெற்குத் திருவீதியில் நாட்டிய நாவலர் சிலையிலிருந்து நாடோறும் நாடோறும் ஒழுகுகின்ற கண்ணீரில் ஒரு சிறு துளி எனலாம் இக் கட்டுரை.

நாவலர் விட்ட கண்ணீர் ஒருசிறிதும் பயன்படவில்லையென்று சொல்லுதற்கில்லை! எத்தனையோ திருத்தங்கள் நாவலர் பெயராலன்றி நடந்திருக்கின்றன; விடிய விடிய சதுர்க் கச்சேரியும், வாண விளையாட்டுமே முக்கியத் தானம் வகித்த விழாக்கள் நின்று விட்டன! ஆட்டுப் பலி மறைந்து போனது! திருவிழாக் காலத்தில் நல்லூர் இருக்கும் புனிதம் வேறு எந்தத் தலத்திலும் காண்டலரிது. இவையெல்லாம புறக்கோலம்.

கர்ப்பக்கிருகத்திலிருந்து உயிர்ப்பான காரியங்கள் திருத்தமடையவில்லை. குருமாரும் சைவப் பிரமுகர்களும் வேதாகம விரோதங்கள்பற்றிச் சிந்திப்பார்களேயாயின் இப்பொழுது நாட்டின் அவல நிலைகள்பற்றி ஆராய்வார்களேயாயின் திருத்தங்கள் கூடிய சீக்கிரத்தில் கை கூடும். நல்லூர் எங்கும் பணம் வந்து குவியும். சர்க்கரைப் பந்தரில் தேன் மாரியாயிருக்கும்.

இங்ஙனமன்றி விழுந்த மாட்டுக்குக் குறி சுடுவதானல் கேடு வந்துகொண்டேயிருக்கும். தீமைக்குத் தலையசைப்பது தீமையை விருத்தி செய்வது.

சைவத் தாபனங்கள் சாத்திர சம்பந்தமான காரியங்களை ஆராய்ந்து தீர்மானித்தற்கு, இச் சேய்நாட்டிலும், தாய் நாட்டிலும் உள்ள படித்த சிவாசாரியர்களோடும் தொடர்பு வைத்துக் கொள்வது சாலவும் நன்று.

திருவருள்துணை.

(வளரும்)

# திருவிழாவும் அதன் உண்மைப் பொருளும்

(2- ஆம் பக்கத்து வளர்ச்சி)

கொடியிறக்கமும் அதனோடு நடைபெறும் மௌனோற்சவமும் பேரா இன்பப் பெருவாழ்வாகிய இறைவனுடன் இரண்டறக் கலந்துள்ள ஆன்மா எதுவித செயலுமற்றுப் பேரின்பம் தரும் இறைவனுள் ஐக்கியப்பட்டு இன்பத்தையே அநுபவிக்கும் என்ற குறிப்பை உணர்த்துவனவாகும்.

ஆண்டவனின் ஆலயத்தில் நடைபெறும் திருவிழாக்கள் வெறும் பொழுதுபோக்கிற்காகச் செய்யப்படுவன அல்ல. ஒவ்வொரு கிரியைகளும் ஒவ்வொரு அர்த்தத்துடனேயே செய்யப்படுகின்றது. எமக்கு அர்த்தம் புரியாததால் அவற்றையிட்டு அவமரியாதை செய்வது சிவ அபராதமாகும். ஆலயத் திருவிழாவின்போது சிவனை நினைந்தும்; அவன் புகழ் பேசியும் எம்மை நன்னெறிக் கண்ணே செலுத்த வேண்டும். நிர்மலனுகிய இறைவனை வழிபடுவது எம்மிடையே உள்ள அழுக்காகிய மலத்தை நீக்கி நாமும் தூய்மையுற்று இன்ப நிலை அடையவே. ஆனல் குளிக்கப் போய்ச் சேறு பூசுவார் போல் எம்மிற் பலர் அறியாமையினுல் ஆலயங்களில் நடைபெறுந் திருவிழாவையும், வழிபாட்டினையும் லௌகீக நோக்குடன் பஞ்சமாபாதகங்களையும் தூண்டத் தக்க வகையில் நடாத்த முயல்கின்றனர், நடன மாதர்களைக் கொண்டு நடனமாடுவித்தல், பக்திச் சூழ்நிலைக்குப் பங்கம் விளைவிக்கும் பாடல்களை ஒலிபரப்புதல், வாண வேடிக்கைகள் போன்ற களியாட்ட நிகழ்ச்சிகளை வைத்தல், சிவ சரிதமல்லாத ஏனைய கதைகளை ஆங்கு பிரசங்கிப்பித்தல் போன்ற புனிதமற்ற செயல்களைச் செய்கின்றனர்; செய்விக்கின்றனர். இதனுல் தமக்கும் பிறர்க்கும் கெடுதியை விளைவிக்கின்றனர். இவைகளில் செலவிடும் அளவற்ற பொருள்களைக் கொண்டு சமயாசாரமுள்ள நற்சிந்தனைகளைத் தூண்டும், புண்ணிய கருமங்களை ஆலயங்களில் செய்ய நம்மவர் முன்வரவேண்டும். நல்வினைகளிலும், சிவ நல்வினைகள் எம்மை ஈடேற்றுவன என்பதை உணர வேண்டும். அதற்கு முறையாக ஆலயங்களிலே திருப்பணிகளையும் திருத்தொண்டுகளையும் செய்தல்வேண்டும். ஆலய வழிபாடு, மாகேசுர பூசை என்பவற்றைச் செய்த நாயன்மார் வரலாறுகளை நம்மவர் அறிந்து அப் பொய்யில் சீர் அடியார்கள் வாழ்ந்து காட்டிய வழியில் செல்ல வேண்டும்;

மண்ணினிற் பிறந்தார் பெறும்பயன் மதிசூடும்
அண்ணலார் அடியார்தமை அமுது செய்வித்தல்
கண்ணினல் அவர் நல்விழாப் பொலிவுகண் டார்தல்
உண்மையாமெனில் உலகர்முன் வருகென உரைப்பார்"

என்ற ஞானசம்பந்தப் பெருமான் வாக்கின்படி ஒழுகி பரம கருணாநிதியாகும் இறைவன் திருவருளைப் பெறுவோமாக;

## கோட்டு விற்பனவு விளம்பரம்

கைதடி (1) சங்கரப்பிள்ளை இராசையர்
(2) பெண் பராசக்தி —வழக்காளிகள்

இல: 4354

எதிராக

கோயிலாக்கண்டி (1) வேலுப்பிள்ளை சிவசுப்பிரமணியம்
(2) பெண் மனோரஞ்சிதம் —எதிராளிகள்

சாவகச்சேரி டிஸ்திறிக் கோட்டின் 4354-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் இரு துண்டுக்காணிகள் 1975ம் ஹு யூலை (ஆடி) மாதம் 14ம திகதி (14—7—75) திங்கட்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் முறையே அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை:

முதல் வட்டி ரூபாய் 5190-62 சதமும் இதில் ரூபாய் 3500/-க்கு 11-12-72 திகதி தொடக்கம் 29-6-73 திகதி வரைக்கும் 100க்கு 9 வீத வட்டியும் பின் திகதி தொடக்கம் முழுத் தொகைக்கும் இறுபடும் வரைக்கும் 100க்கு 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 295-10 சதம், இதில் ரூபாய் 150 கோட்டுச் செலவில் இறுபட்டது. மேலும் ரூபா 1750/- 14-10-74 இல் இறுபட்டது.

### ஆதன விபரம்

(1) வடமாகாணம யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தென்மராட்சிப் பகுதி நாவற்குளிக் கோவிற்பற்று கோயிலாக்கண்டி இறை "வெல்லார் அடைப்பும் ஓட்டுப்பள்ளமும்" நிலப்பரப்பு 2½ம மேற்படி "வெல்லார் அடைப்பும் ஓட்டுப்பள்ளமும்" நிலப்பரபபு 2½யும் ஒருங்கு சேர்ந்து நிலப்பரப்பு (5) ஆனல் ஆட்சிப்படி நிலப்பரப்பு (8) எட்டும் பயிர்களும், எல்லை: கிழக்கும், வடக்கும் றோட்டு. மேற்கு: விக்ரர் சத்தியநாதனுக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம், தெற்கு: றோட்டு, மறுபேருக்குமுரிய ஆதனமும், இதடங்கலும்.

(2) மேற்படி கோயிலாக்கண்டி இறை "புளியடி வயல்" நிலப்பரப்பு (6) ஆறும், எல்லை: கிழக்கு சின்னையா செட்டியார் சிவசண்முகநாதனின ஆதனம், மேற்கு: அருளானந்தம் பெண் அதிசயத்தின் ஆதனம்; தெற்கு: வீதி, வடக்கு: வி. எஸ். எஸ். சத்தியநாதனுக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். இதடங்கலும்.

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
கொமிஷனர், விலைமதிப்பாளர்

தெல்லிப்பழை
19-5-75

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### THOUGHTS TO BE TREASURED

இமையவர் தம்மையும் எம்மையும் முன்னம்
அமைய வகுத்தவன் ஆதி புராணன்,
சமயங்கள் ஆறும்தன் தாளிணை நாட
அமைய (அ)ங்கு உழல்கின்ற ஆதிப்பிரானே.

The ancient Lord who created the Devas and men in accordance with their previous deeds He is the beginningless Lord that pervades and manifests Himself in the six (orthodox) creeds that search for His Gracious Feet.

திருச்சிற்றம்பலம்

நமச்சிவாயவே ஞானமும் கல்வியும்
நமச்சிவாயவே நானறி விச்சையும்
நமச்சிவாயவே நாவிற் றேத்துமே
நமச்சிவாயவே நன்னெறி காட்டுமே.

திருச்சிற்றம்பலம்

Hindu Organ

FRIDAY, JUNE 20, 1975

# Democracy and Demonstrations

Time had been when the discussion on political questions was confined to the legislative assemblies of a country. With the evolution of political thinking the platform and the press formed a formidable forum for analysing all national problems. But in the terrific speed of the march of time modern methods have superseded the customary approach putting the people in the forefront. And today demonstrations have become a definite and perhaps decisive step in forcing the hand of authority whatever it may be or by whomsoever it may be handled.

However, the question remains to be answered whether demonstrations are legally permissible or in the least conducive to decisions being taken on problems of paramount importance. In the search for an answer, it must be remembered that demonstrations always tend to be for and against a situation or in more precise terms, lead to counter-demonstrations. How far these outward exhibitions of feelings reflect the true opinion of the people is a matter for logical analysis as the dimensions of a demonstration cannot be depended on for gauging the moral content. Numbers, it may be conceded, have a significance. But if the size of every demonstration for and against a certain happening is giant-like, no competent authority will be able to arrive at a conclusion regarding the superiority of any single exhibition.

Democracy thus is being confronted with a disconcerting diversion—the demonstration by means of processions, peaceful or militant, silent and noisy. The natural course of events as based on reason and law stands impeded by extraneous efforts that often lead to confusion and chaos. It looks as if not only democracy but every one connected with its working being on trial not in the accepted manner but by force of demonstrations.

India, popularly reputed to be the largest democratic nation in the world, is now in the throes of the trials and tribulations in which democracy has been placed. What is the significance of this new trend?

"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

# Proposed Hindu Temples Bill

By S. SIVASUBRAMANIAM
(Life Member, Jaffna Saiva Paripalana Sabhai)

In continuation of my submissions made in the issue of the Hindu Organ of Friday May 9, 1975, relating to the Draft Bill concerning Hindu Temples and Charitable Trusts, the following further observations are made now:—

1. There is a grave misconception that all Hindu Temples are public. As a matter of fact, it is not so. Some are private; some are public; and some are on the border line.
2. The misconception that all Hindu Temples are public is due to confusion of fact and also confusion regarding the Law that ought to govern the subject.
3. A correct appreciation of the position of the Hindu Temples has been stated on several occasions and from different quarters from time to time. So early as the year 1906, that is 69 years ago, the Times of Ceylon in its issue of June 6, inter alia, contained the following passage:—

"The position of many Hindu-Temples is somewhat different from Buddhist institutions of a similar character. Many of the Hindu temples are privately endowed and privately controlled, and upon these no outside influence can be brought to bear. The chief Hindu temple in Colombo is an instance. It was erected and amply endowed by the late A. Ponnambalam, Mudaliyar. It was practically intended to be a gift of the Mudaliyar and his family to the Hindu community. The founder was himself its trustee during his life, and on his death the trusteeship passed to his eldest son, Mr P. Coomaraswamy, whose administration of it won admiration in India. Since Mr. Coomaraswamy's death, Mr. Ramanathan took up the duties of trustee. Naturally such a temple is beyond the interference of the law. It is a family-property, and the trustee has as full and unchallenged control of it as he has over his own private estate. There are many temples similarly situated. The management of some of them would furnish models for trustees to copy."

4. For the preservation of the assets and properties of Hindu Temples etc., there was an agitation which reached an important stage when it was taken up and emphasized by the late Sri La Sri Arumuga Navalar.
5. Thereafter, the Trusts Ordinance No. 9 of 1917 was passed. Thereupon for a considerable period of time, no special legislation in respect of Hindu Temples was deemed necessary. Later, Mr K. Kanagaratnam M.P., for Vaddukoddai with his great enthusiasm and earnestness moved in the matter and a Commission was appointed by Government mainly owing to his efforts. The Commission issued a report. There was Opposition by large sections of the Hindu public to the recommendations on the ground that the same were harmful to to the welfare of the Hindu Community. In view of the Opposition and owing to inherent weaknesses in the recommendations, the Government did not implement the report. In this connection. Government was also greatly influenced by the view that it need not interfere in Hindu Religious Affairs. The Government felt there was no necessity for any special legislation in respect of Hindu Temples alone and that if the Law required changes, the same could be effected through Amendments to the existing Trust Ordinance with the object of preserving properties and assets.
6. A cardinal principle in Law is that every person is presumed to be innocent till the contrary is proved Thus we are entitled to submit that every Temple Trustee is honest till the contrary is proved—The Trustees are entitled to the benefit of the presumption of innocence; religious principles, equity and practical considerations require that, if any wrong is alleged to have been committed by any Temple Trustee, the burden of proof should be on the person who makes the allegation. Accordingly this factor is an added reason for not accepting the proposed draft bill but for making suitable amendments to the existing Trusts Ordinance which affects the entire population of Sri Lanka, without having any special legislation for the Hindus. The Hindu community is automatically included or caught up in the general population of the country which is governed by the Trusts Ordinance.

( To be continued )

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலக மெல்லாம்.

## NOTICE

In the District Court of Mallakam

No. P/75

Jacobpillai Manuvetpillai of Palaly, Kankesanturai

Vs. Plaintiff

1 Kurusenu Elias and wife
2 Elizabethammah
3 Thambo Benifas
4 Kanagasabai Everitsar
5 Kanagasabai Pathtimanoharan all of Palaly, Kankesanthurai

Defendants

It is hereby notified that Action No. P/75 has been instituted in the District Court of Mallakam under the Partition Act No. 16 of 1951 for the Partition/sale of the land called Kurunthady in extent 3 Lms. v. c. and 1 Kuly and situated at Palaly, in Myliddy Parish, Valikamam North Division, Jaffna District, Northern Province.

The defendants in the aforesaid action are summoned to appear in Court on the 31st day of July 1975 at 9 O'clock of the forenoon.

By order of Court
Sgd. Joseph Marian
Registrar

This 16th day of May 1975

3, 20

Printed and published by the Proprietors, the Saiva Paripalana Sabhai, Jaffna, at their Saiva Prakasa Press 450 K.K.S. Road Vannarponnai, Jaffna on Friday June 20, 1975.

EDITOR-IN-CHIEF R. N. SIVAPIRAKASAM

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org